பக்கங்கள்: 11

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 05 செவ்வாய்க்கிழமை 20.12.2022 கதிர் 45

இனி அது ரகசியம் அல்ல!

இலங்கை விவகாரத்தில் இந்தியாவின் சிரத்தை தீவிரமடைந்திருப்பது வெளிப்படையானது.

இந்தியா தனது தென்கோடியில் தனது கவனத்தை மிக நுணுக்கமாகத் தீவிரமாக்கி இருக்கின்றது.

மஞ்சள்

☞2

# வீடுகள் எரிப்புக்கு நீதி கேட்டு 39 அரசியல்வாதிகள் வழக்கு!

## ஷவேந்திர சில்வாவின் நடவடிக்கை சந்தேகத்துக்குரியதாக இருந்ததாம்



கொழும்பு,டிசம்பர் 20

அமைச்சர்கள் மற்றும் அரசியல்வாதிகளின் வீடுகள் கடந்த மே 9 ஆம் திகதி தாக்கி எரிக்கப்பட்ட சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்தி, குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்தாணை ( ரிட் ) மனுவை எதிர்வரும் ஜனவரி மாதம் 16 ஆம் திகதி பரிசீலிக்க மேன் முறையீட்டு நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்துள்ளது.

☞2



## சொல்ஹெய்ம் - சம்பந்தன் சந்திப்பு

முன்னர் இலங்கையின் சமாதான பேச்சுக்களில் அனுசரணை பணிவகித்த வரும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சுற்றுச்சூழல் விவகார ஆலோசகருமான எரிக் சொல்ஹெய்ம் நான்கு நாள் வியமாக கொழும்பு வந்துள்ளார்

அவர் நேற்று தமிழ்த் தேசியக்

☞2

## காப்பாற்றப்பட்ட 104 ரோகிங்கியர்களும் மிரிஹான குடிவரவுத் தடுப்பு மையத்துக்கு!

### படகு உதிமையாளர் மட்டும் விளக்கமறியலில்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிச.20

இலங்கை வடக்குக் கடற்பரப்பில் பழுதடைந்த படகில் தத்தளித்த சமயம் இலங்கைக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்ட 105 ரோகிங்கியர்களில் 104 பேரை உடனடியாக யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றி,

☞2



## புதிய கடற்படைத் தளபதி ஜனாதிபதியுடன் சந்திப்பு

இலங்கையின் புதிய கடற்படை தளபதியாக நேற்று பதவி ஏற்றுக்கொண்ட வயசு அட்மிரல் பிரியந்த பெரேரா நேற்றுக் காலை ஜனாதிபதி ரணில்

☞2



ரோகிங்கியா அகதிகள் நேற்று முன்னிரவு யாழ். சிறைக்குக் கொண்டு வந்து இறக்கப் பட்டபோது.....

## இன்று சஜித் கிளிநொச்சிக்கு கல்லூரிக்கு பஸ் கையளிப்பு



(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,டிச.20

எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ் இன்றையதினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு பஸ் ஒன்றை அன்பளிப்பாக அவர் கையளிப்பார்.

☞10

## பல்கலை மாணவ பிக்குகள் தாடி, தலைமயிருடன் காட்சி

### மிஹிந்தலை பீடாதிபதி விசனம்



பல்கலைகழகங்களில் தற்போது கல்வி பயிலும் மாணவ பிக்குகள் ஸஹ்ரான் போன்று தலைமுடி, தாடி வளர்த்து லெனினின் தலிபான் கோட்பாட்டின் படி காணப்படுகிறார்கள்

☞2

## வவுனியாவில் கன மழை வீடுகளுக்குள் வெள்ளம்



வவுனியாவில் பெய்து வரும் கன மழை காரணமாக 5 வீடுகளுக்கும் வெள்ள நீர் புகுந்துள்ளதுடன், தாழ் நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து வவுனியாவில் நேற்று அதிகாலை முதல் மழை

☞10

## றுகுணு பல்கலையின் 11 மாணவர்கள் கைது

பகிடிவதை சம்பவம் தொடர்பில் றுகுணு பல்கலைக்கழக மாணவர்கள் 11 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட வுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பொலிஸார் 9,417 பேருக்கு பதவி உயர்வு

மொத்தம் 9,417 பொலிஸ் அதிகாரிகளை அடுத்த தரத்திற்கு பதவி உயர்த்த அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை பொது

☞10

## 4 இலங்கைத் தூதர்களின் நியமனங்களுக்கு அனுமதி

நான்கு தூதுவர்கள் மற்றும் இரண்டு நிரந்தரப் பிரதிநிதிகள் நியமனத்துக்கு உயர் பதவிகளுக்கான நாடாளுமன்றக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

☞2

## ரூ.500 கோடி பெறுமதி சீருடைத்துணி மாணவர்களுக்கு சீனாவின் அன்பளிப்பு



இலங்கை மாணவர்களுக்காக ஐந்நூறு கோடி ரூபா பெறுமதியான பாடசாலை சீருடைத் துணிகளை சீனா நன்கொடையாக வழங்கியுள்ளதாக கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் நேற்றுத் திங்கட்கிழமைதெரிவித்துள்ளது.

டுவிட்டரில் சீனத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்தியில், சீனாவினால் வழங்கப்பட்ட பள்ளி

☞10

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூடைகள், கடலட்டைச் சாக்குகள், வாசனிஷ் கான்கள் என்று சாதாரண நாட்டுப் படகுகளில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படும் நானாவித பொருள்கள் முதல் கஞ்சா மற்றும் ஐஸ் முதலிய சிந்தெட்டிக் போதைப் பொருள்கள் வரை எல்லாம் தமிழகப் பக்கத்திலேயே டப் டப் என்று பெருமளவில் மாட்டிக் கொள்வது பற்றிய செய்திகள் இப்பொழுது எல்லாம் அடிக்கடி வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இது போன்று தினசரி ஓரிரண்டு 'கேஸ்' ஆவது தமிழகப் பத்திரிகைகளில் வெளியாகாமல் இல்லை.

இந்தியாதனது முழுக் கவனத்தையும் தென்கோடி முனையில் கூர்மையாக்கி இருக்கின்றது என்பதுதான் அதன் அர்த்தம்.

இவற்றுக்கிடையில் இந்தியாவின் பிரதான புலனாய்வு அமைப்பான 'றோ' வின் தலைவர் கொழும்புக்கு வந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும், முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவையும் சத்தம் சந்தடியின்றி சந்தித்து விட்டுச்சென்ற போது, அது பற்றிய செய்திகள் எல்லாம் ஊடகங்கள் மூலம் கசிந்து, சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் சர்ச்சைகளையும், எங்கள் தொடர்பில் அதிருப்திகளையும் ஏற்படுத்தியமை தெரிந்த விடயம்தான்.

இப்போது இன்னொரு இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் நேற்று கொழும்பு வந்திருக்கிறார். இந்த அதிகாரியின் விஜயம் இரகசியமானது அல்ல. அவர் இந்திய பாதுகாப்பு அமைச்சில் இலங்கை உட்பட்ட பிராந்திய விடயங்களுக்கு பொறுப்பான இணைச் செயலாளர் புனித் அக்ரவால். இந்தப் பதவியில் அவர் மூன்று வருடங்களுக்கு மேல் இருக்கின்றார்.

எத்தனை நாள் கொழும்பில் நிற்பார், யார், யாரைச் சந்திப்பார் என்பவை இன்னும் உறுதியாகத் தெரியவில்லை.

நேற்று இரவு அவர் மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ஜீவன் தொண்டமான், சுமந்திரன் ஆகிய சிறுபான்மை தரப்பின் முக்கிய எம்.பிக்கள் நால்வரையும் –

'பவ்ரல்' அமைப்பைச் சேர்ந்த றோஹண ஹெட்டியாராய்ச்சி, மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் பாக்கியசோதி சரவணமுத்து மற்றும் ஜெஹான் பெரேரா முதலிய சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் கொழும்பில் ஒன்றாக – ஒரே சமயத்தில் – இரவு விருந்துடன் சந்தித்துப் பேசினார்.

பேச்சின் நடுவே இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் பங்குபற்ற வருமாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கை அழைப்பு ஏதும் அனுப்பி உள்ளதா என்று அவரிடம் கேட்கப்பட்டது. அப்படி அழைப்பு ஏதும் தரப்படவில்லை, ஆனால் இந்த பிராந்தியத்தில் இருக்கும் அனைத்து நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது, அந்த வகையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கருக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

***

புலிகள் காலத்து சமாதானப் பேச்சின் அனுசரணையாளரான எரிக் சொல்ஹெய்ம் நான்கு நாள் விஜயமாக கொழும்பு வந்துள்ளார்.

"வருகையில் நோக்கம் என்ன? ஜனாதிபதி ரணிலின் சுற்றுச்சூழல் விவகார ஆலோசகர் என்கின்றனர், அதில் அர்த்தம் உண்டா?" – என்று விடயத்துடன் சம்பந்தப்பட்ட முக்கிய தரப்பு ஒன்றிடம் கேட்டேன். அத்தரப்பு விழுந்து விழுந்து சிரித்தது.

"சுற்றுச்சூழலுக்கு உரிய பரிந்துரை வழங்கக் கூடிய புத்திஜீவி உள்நாட்டில் இல்லையா, வெளிநாட்டிலிருந்து சொல்ஹெய்மை இறக்குமதி செய்வதற்கு? அது வல்லக் காரணம். அமைதிப் பேச்சுகளை பல மட்டங்களில் ஆரம்பித்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதனை ஒட்டி ஒரு கட்டத்தில் தான் ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்காவுடன் ஊடாட்டம் நடத்த வேண்டி நேரும் என்று கருதுகின்றார். அதற்கான ஆளை இப்போதே தேடிப்பிடித்து பக்கபலமாக கையோடு வைத்திருக்கின்றார்." – என்றால் அவர்.

அது உண்மை என்றால், விரைவில் விடயங்கள் பகிரங்கமாகும் என்று நம்பலாம்.

– மின்னல் –

## வீடுகள் எரிப்புக்கு நீதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மே 9 சம்பவங்களில் வீடுகளை இழந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்தன, காமினி லொக்குகே, ஜனக பண்டார தென்னகோன், பிரசன்ன ரணதுங்க, பிரசன்ன ரணவீர, சிறிபால கம்லத், எஸ். எம். சந்திரசேன, ஹொன் சேமசிங்க, ரோஹித அபேகுணவர்தன, கோகிலா குணவர்தன, சஹான் பிரதீப் உள்ளிட்ட 39 பேர் இணைந்து இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

பொலிஸ் மா அதிபர், பாதுகாப்புச் செயலாளர், இராணுவத் தளபதி, பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரி, மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட 18 பேர் இம்மனுக்களில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

கடந்த மே மாதம் 9ஆம் திகதி நாடளாவிய ரீதியில் அரசியல்வாதிகளின் வீடுகளைத் தாக்கி தீ வைத்த சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு அட்மிரல் ஒவ் த ப்ளீட் வசந்த கர்ணாகொட, மார்ஷல் ஒவ் த எயர் போர்ஸ், ரொஷான் குணதிலக்க மற்றும் ஜெனரல் தயா ரத்நாயக்க ஆகியோர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டதாக மனுதாரர்களான அரசியல்வாதிகள் இந்த ரிட் மனுவில் தெரிவித்துள்ளனர்.

மே மாதம் 09ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்களின் பின்னணியில் சதி இருப்பதாக அக்குழு கண்டறிந்துள்ளதாகவும், இது தொடர்பில் மேலும் பல பரிந்துரைகளை வழங்கியுள்ளதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவம் குறித்து முறையான விசாரணை நடத்தப்படவில்லை எனவும் குழுக்கள் வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் குற்றவியல் சட்டத்தின் கீழ் விசாரணை நடத்த பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்குமாறும் மனுதாரர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், இந்த தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்காத பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளை கண்டறிந்து அவர்கள் மீது குற்றவியல் மற்றும் இராணுவ சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறும் மனுவில் மேலும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன் சம்பவம் இடம்பெறும் போது, பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரியாக செயற்பட்ட ஜெனரால் ஷவேந்திர சில்வாவின் நடவடிக்கை சந்தேகத்துக்குரியதாக இருப்பதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கரன்னாகொட குழுவின் அறிக்கையை மையப்படுத்திஇந்த சந்தேகம் மனுவில் எழுப்பட்டுள்ளது.

இந்த மனு மேன் முறையீட்டு நீதிமன்ற நீதிஅரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் பரிசீலனைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது மனுதாரர்களுக்காக ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன ஆஜராகி விடயங்களை முன் வைத்த நிலையில், பிரதிவாதிகளுக்கு அறிவித்தல்

## சொல்ஹெய்ம் – .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் எம்.பியை அவரது இல்லத்தில் சந்தித்து சுமார் அரை மணி நேரம் பேசினார். இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பியும் உடன் இருந்தார்.

முன்னதாக எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவையும் சந்தித்துப் பேசினார்.

## காப்பாற்றப்பட்ட 104 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்து மிரிஹானவில் உள்ள குடிவரவு தடுப்புமையத்துக்கு அனுப்பவும், மற்றைய ஒருவரை விளக்க மறியல் வைக்கவும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் காங்கேசன்துறை கடற்படைமுகாமில்தடுத்துவைக்கப்பட்டிருந்த அவர்களில் 104 பேர் நேற்று இரவு யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

பர்மாவில் இருந்து விரட்டப்பட்ட ரோகிங்கிய இன முஸ்லிம்கள் பங்களாதேஷில் அமைந்திருந்த அகதி முகாமில் தங்கியிருந்த சமயம் இந்தோனேசியாவிற்கு தப்பிச் செல்லும் நோக்கில்

படகு மூலம் சட்ட விரோதமாக பயணித்தபோதே நடுக்கடலில் படகு பழுதடைந்து 3 வாரங்களாக நடுக் கடலில் தத்தளித்தபோது நேற்று முன்தினம் இலங்கைக் கடற்படையினரால் காப்பாற்றப்பட்டனர்.

இதேநேரம் படகில் பயணித்த 105 பேரில் 104 பேர் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட அதேநேரம் படகு உரிமையாளரான முகமது உசைனை எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேநேரம் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு கொண்டு வரப்பட்ட ரோகிங்கியர்களில் படகோட்டி தவிர்ந்த ஏனையோர் இன்று அல்லது நாளை மீரிஹானவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

## புதிய கடற்படைத் தளபதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கிரமசிங்கவை மரியாதை நிமித்தம் ஜனாதிபதியின் அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார்.

## பல்கலை மாணவ ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என மிஹிந்தலை ரஜமஹா விகாரை பீடாதிபதி வலவாஹங்குனவெவ தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார்.

ஸஹ்ரான் என்பவர் தாடியுடன் இறந்து விட்டார். அதன் பிறகு பலர் ஸஹ்ரான்களைப் போன்று தாமும் மாற ஆரம்பித்து தாடி வளர்க்கின்றனர். மேலும், நமது பல்கலைக்கழகங்களில் மாணவர் பிக்குகள் முடிமற்றும் தாடியை வளர்க்கத் தொடங்கியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த மாணவ பிக்குகள் மூன்று அல்லது நான்கு வருடங்களின் பின் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறும் வகையில் சட்டம் இயற்ற வேண்டும் என மிஹிந்தலை ரஜமஹா விகாரை பீடாதிபதி வலவாஹங்குனவெவ தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார்.

## 4 இலங்கைத் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரான்ஸ் குடியரசின் இலங்கை தூதுவராக நிரோனி மனிா டயஸ் அபேவிக்ரம குணசேகர மற்றும் ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பிற்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக பாரிஸில் நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான

(10ஆம் பக்கம் பார்க்க)







# சீன எக்சிம் வங்கியுடன் இணக்கப்பாட்டை எட்டினால் மாத்திரமே அடுத்த கட்டத்தை நோக்கி நகர முடியும்!

## ஹர்ஷ டி சில்வா ஆலோசனை



நாட்டின் மொத்த வெளிநாட்டு கடன் தொகையில் 50 சதவீதம் சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவையாகும். அவற்றில் பெருமளவான தொகையை சீன எக்சிம் வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ளது.

எனவே கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சீன எக்சிம் வங்கியுடன் இணக்கப்பாட்டை எட்டினால் மாத்திரமே, அடுத்த கட்ட வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

எதிர்வரும் 4 மாதங்களுக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் பணிப்பாளர் மட்ட இணக்கப்பாட்டை எட்ட முடியாத நிலைமை ஏற்பட்டால் என்னவாகும்? மக்கள் எதிர்பார்க்கும் சலுகைகளை வழங்கக் கூடிய இயலுமை எமக்கிருக்கின்றதா? என்ற கேள்விகளுக்கு அரசாங்கத்திடம் பதிலை எதிர்பார்ப்பதாகவும் கலாநிதி ஹர்ஷ டி சில்வா குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உலகின் பல்வேறு நாடுகள் எதிர்நோக்கும் கடன் நெருக்கடி தொடர்பாகக் கலந்துரையாடல்களில் கலந்துகொள்ள சீனா இணக்கம் தெரிவித்துள்ளதாக, சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா தெரிவித்துள்ள விடயம் இன்று பேசுபொருளாகியுள்ளது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கைக்கு காணப்படுகின்ற பிரதான சவால் சீனாவாகும். சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்களை மறுசீரமைப்பதற்கான தெளிவானதொரு வேலைத் திட்டம் தொடர்பில் இதுவரையில் கலந்துரையாடப்படவில்லை. எமது மொத்த வெளிநாட்டு கடனில் 50 சதவீதம் சீனாவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவையாகும். அதிக தொகையை சீன எக்சிம் வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ளது. அதற்கமைய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாம் உண்மையில் கலந்துரையாட வேண்டிய ஒரேயொரு வங்கி சீன எக்சிம் வங்கி மாத்திரமேயாகும். எக்சிம் வங்கியுடன் ஏதேனுமொரு இணக்கப்பாட்டை எட்டினால் மாத்திரமே, எம்மால் அடுத்த கட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியும்.

உலக நாடுகள் இரண்டாக வகைப் படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் வருமானம் குறைந்த நாடுகள் ஜீ.20 பொது கட்டமைப்பின் கீழ் எவ்வாறு கடன் மறுசீரமைப்பை மேற்கொள்வது என்பது தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளன. எனினும் இலங்கை போன்ற நடுத்தர வருமானம் கொண்ட நாடுகள் இதில் உள்ளடக்கப் படவில்லை. எனவே இவ்வாறான நாடுகள் எவ்வாறு கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளப் போகின்றன என்பதற்கான புதிய வேலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பணிப்பாளர் மட்ட இணக்கப்பாட்டை எட்டுவது தொடர்பில் தெளிவாக அறிவிக்கப்படவில்லை.

நாடு எந்த பாதையில் சென்றுகொண்டிருக்கிறது என்பது தொடர்பில் அரசாங்கத்திடம் தெளிவான பதில் இல்லை. வருடாந்தம் ரூபாவின் பெறுமதியைத் தக்கவைத்துக் கொள்வது தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துக்கு, மத்திய வங்கியால் வழிகாட்டல் வரைபடம் தயாரிக்கப்படும். எனினும் 2023 ஆம் ஆண்டுக்கான வரை படம் வழங்கப்படவில்லை. எனவே, அடுத்த ஆண்டு நாம் பயணிக்கவுள்ளோம் என்பது கேள்விக்குறியாகும்.

எதிர்வரும் 4 மாதங்களுக்கு சர்வதேச நாணய நிதியத்துடன் பணிப்பாளர் மட்ட இணக்கப்பாட்டை எட்ட முடியாத நிலைமை ஏற்பட்டால் என்னவாகும்? மக்கள் எதிர்பார்க்கும் சலுகைகளை வழங்கக் கூடிய இயலுமை எமக்கிருக்கின்றதா? இதற்கான பதிலையே அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்க்கின்றோம். வழிகாட்டல் வரைபடமொன்று 2023 இல் எங்கு செல்கின்றோம் என்பது தெரியாமலேயே பயணிக்கவுள்ளோம்.

சர்வதேசம் எதிர்பார்க்கும் வேலைத் திட்டமொன்றை சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும், ராஜபக்ஷ அரசாங்கத்துக்கும் முடியாமல் போயுள்ளது. இதற்கான ஒரேயொரு மாற்று வழி புதிய அரசாங்கமொன்றாகும். புதிய அரசாங்கத்தால் முன்வைக்கப்படும் வேலைத்திட்டத்தை சர்வதேசமும் நாட்டு மக்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும். இவர்களால் நாட்டைக் கொண்டு செல்ல முடியாது. சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடு தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்க முடியாத அரசாங்கத்தால், எவ்வாறு நாட்டை நிர்வகித்துச் செல்ல முடியும்?

மக்களுக்கு மேலும் மேலும் சுமையை சுமத்தாமல், அவர்கள் விரும்பும் ஆட்சியை அமைப்பதற்கு வாய்ப்பை வழங்குமாறு வலியுறுத்துகின்றோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பதவி காலம் காணப்படுகிறது. எனினும் மார்ச் மாதத்தின் பின்னர் பொதுத் தேர்தலை அறிவிப்பதற்கான அதிகாரம் அவருக்கு காணப்படுகிறது. அரசமைப்பின் படி அதற்கு வாய்ப்பளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். – என்றார்.

# புதிய கூட்டணியில் போட்டியிட தீர்மானம்; சின்னம் குறித்து விரைவில் அறிவிப்போம்

## பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு



புதிய கூட்டணியுடன் தேர்தலில் போட்டியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஏற்கனவே 8 கட்சிகளுடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விரைவில் சின்னம் தொடர்பாக தீர்மானித்து அறிவிக்கப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹா, உடுகம்பொல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் மூலம் நாட்டின் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. அரசியல் தேவைக்காகவே தற்போது தேர்தலை நடத்துமாறு கோரப்படுகிறது.

நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்ட தேர்தல் நடத்தப்பட வேண்டும். எந்த நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக உள்ளது.

புதிய கூட்டணியுடன் தேர்தலில் போட்டியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக ஏற்கனவே 8 கட்சிகளுடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விரைவில் சின்னம் தொடர்பாகத் தீர்மானித்து அறிவிக்கப்படும். கொரோனாத் தொற்றுக் காரணமாக உள்ளூராட்சித் தேர்தலை ஓராண்டு காலம் தாழ்த்த வேண்டிய நிலைமை அரசாங்கத்துக்கு ஏற்பட்டது.

அதற்காக தொடர்ந்தும் தேர்தலை காலம் தாழ்த்துவது எமது நோக்கமல்ல. ஆனால், எதிர்க்கட்சிகள் அவ்வாறானதொரு சித்தாந்தத்தை நாட்டில் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றன.

தேர்தல் முறைமையில் திருத்தங்களை மேற்கொள்வது தாமதப்படும் எனில், பழைய முறைமையில் உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்பட வேண்டும் என தனிப்பட்ட முறையில் நான் நம்புகிறேன்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, பொதுஜன பெரமுன மற்றும் மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து விலகிச் சென்றவர்கள் அனைவரும் ஒரே கொள்கையின் ஒன்றிணைந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

தேர்தல் வெற்றியை தீர்மானிக்கும் அதிகாரத்தை மக்களுக்கு வழங்க வேண்டும். ஜே.வி.பி. உட்பட சில கட்சிகள் எப்போதும் பெருமை பேசிக் கொண்டிருப்பதைத் தவிர வேறு எதனையும் செய்யவில்லை.

அமைதியான போராட்டத்தை சிலர் அபகரித்தனர். போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர்களும், கஞ்சா வியாபாரிகளும், விபச்சாரிகளுமே இறுதி நேரத்தில் அங்கிருந்தனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களே கூறுகின்றனர்.

பேராசிரியர்கள் மீது தாக்குதல் நடத்துதல், வீடுகளுக்குத் தீமூட்டுதல் போன்றவை போராட்டத்தில் இருந்தே ஆரம்பித்தன. நாட்டில் நிம்மதியாக வாழ்வது, தாம் பெறும் வருமானத்துக்கு ஏற்ற பொருளாதாரத்தை நாட்டில் உருவாக்குவது போன்ற விடயங்களைத் தவிர மற்றுமொரு போராட்டத்தை மக்கள் எதிர்பார்க்கவில்லை.

இந்த நெருக்கடியில் இருந்து எப்படி மீள்வது என்று சிந்திக்க வேண்டும். இந்த நெருக்கடியை நாம் ஒன்றாக எதிர்கொள்ள வேண்டும். தனித்தனியாக செயற்படுவதால் நாட்டுக்கு எந்த நன்மையும் ஏற்படாது. – என்றார்.

# வெளிநாடுகளுக்கு வீட்டுப்பணிப்பெண் தொழிலுக்கு எவரையும் அனுப்போம்

## மனுஷ நாணயக்கார திட்டவட்டம்



அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்குப் பின்னர் வீட்டுப் பணிப்பெண் தொழிலுக்கு இலங்கையில் இருந்து யாரையும் அனுப்புவதில்லை.

சிறந்த பயிற்சி பெற்றவர்களையே வெளிநாட்டு தொழிலுக்கு அனுப்புவோம் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

வீட்டுப்பணிப்பெண்களாக வெளிநாடுகளுக்கு செல்பவர்கள் அங்கு பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாகி வருகின்றனர் முறையான பயிற்சி இல்லாமல் இவ்வாறு தொழில்வாய்ப்புகளுக்கு செல்வதே இதற்குக் காரணமாகும்.

அதேபோன்று போலி முகவர்களின் பொய் வாக்குறுதிகளை நம்பிச் செல்பவர்களும் இவ்வாறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க நேரிடுகின்றனர்.

அதனால் வெளிநாட்டுத் தொழிலுக்குச் செல்பவர்கள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்து செல்லுமாறே நாங்கள் தெரிவிக்கின்றோம். அவ்வாறு பதிவு செய்து செல்பவர்கள், அங்கு ஏதாவது பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டால் அதுதொடர்பில் நாம் தலையிட்டு நடவடிக்கை எடுக்க முடியும்.

அத்துடன் 5வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகள் இருக்கும் தாய்மார்களுக்கு வெளிநாட்டுதொழிலுக்கு செல்ல முடியாது என்ற ஒரு சட்டம் இருந்தது. என்றாலும் வாழ்க்கைச்செலவு காரணமாக இவ்வாறான தாய்மார்கள் சட்ட விரோதமான முறையில் செல்கின்றனர்.

அதனால் இந்த சட்டத்தை தற்போது இலகுவாக்கி, 2 வயதுக்குக் குறைந்த பிள்ளைகள் இருக்கும் தாய்மார்களுக்கு வெளிநாட்டுத் தொழிலுக்கு செல்வதற்குத் தடைவிதித்திருக்கின்றோம்.

அதேநேரம் எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கையில் இருந்து வீட்டுப்பணிப்பெண் தொழிலுக்கு அனுப்பாமல் இருப்பதற்குத் தீர்மானித்திருக்கின்றோம். அவ்வாறு அனுப்புவதாக இருந்தால், அவர்கள் அது தொடர்பில் சிறந்த பயிற்சி பெற்றவராக இருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

வெளிநாட்டுதொழில்வாய்ப்புக்களைப் பெற்றுச்செல்பவர்கள் அங்கு சிறந்த தொழில் வாய்ப்புக்களுடன் கூடிய சம்பளத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமான தொழில் பயிற்சி வழங்கியே அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். எதிர்காலத்தில் பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் மாத்திரமே வெளிநாட்டுத் தொழிலுக்கு அனுப்பப்படுவார்கள்.

அத்துடன் பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் குற்றச்சாட்டும் கடந்த காலங்களில் இருந்து தெரிவிக்கப்படுகின்றது.

என்றாலும் தற்போது பெண்களுக்கு நிகராக ஆண்களும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களுக்காகச் செல்கின்றனர். நாட்டில் தற்போது நூற்றுக்கு 24 வீதமான பெண்களே வெளிநாட்டு தொழிலுக்குச் சென்றிருக்கின்றனர்.

மேலும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு கட்டமைப்பை முழுமையாக டிஜிற்றல் மயமாக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். இதன் மூலம் இந்தத் துறையில் ஏற்படுகின்ற மோசடிகளைக் குறைத்துக்கொள்ள முடியும். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசு தரப்புக்கு நீதி செய்ய முடியாத அரசு

'தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்குமாம்' என்பார்கள்.

வீடுகள் எரிப்புக்கு நீதி கேட்டு, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கும் 39 அரசியல்வாதிகளின் நிலைமையை எண்ணும்போது இந்தப் பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

இந்த 39 பேரில் பலர் இன்னும் சிரேஷ்ட அமைச்சர்கள். வீடுகள் எரிப்புக்குப் பின்னர் உள்நாட்டுப் பாதுகாப்புத் துறைக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சரும் கூட அவர்களிலே அடங்குவர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இறுதிப் பதவி நிலையின் போது இந்த வீடுகள் எரிப்புச் சம்பவங்கள் எல்லாம் நடந்தன.

அதற்குப் பின்னர் ஜனாதிபதியாக வந்த ரணில் விக்ரமசிங்க முன்னைய அரசு கால எதிர்ப்புப் போராட்டங்கள் தொடர்பில் கடும் நிலைப்பாட்டுடன் நடவடிக்கை எடுக்கப் பொலிஸாரையும், முப்படையினரையும் வழிப்படுத்தி வருகின்றார் என்பது வெளிப்படையானது.

அத்தகைய ஜனாதிபதியினால், நியாயமான விசாரணைகள், புலனாய்வுகளை முன்னெடுக்க வைத்து, தமக்கு நீதி பெற்றுத் தர முடியாது என்ற நினைப்பில்தான் அவர்கள் அதையும் தாண்டி, மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்குப் போயிருக்கின்றார்கள்.

தாங்கள் சிரேஷ்ட அமைச்சர்களாக இருக்கும் அரசினால் கூட, தங்களுக்கு நீதி கிடைக்கக் கூடிய விசாரணைகளையோ புலனாய்வுகளையோ முன்னெடுக்க வைக்க முடியாது என்ற கருத்தில் தான் அவர்கள் அதைத் தாண்டி, நீதிமன்றத்தின் வாசற்படியை ஏறி இருக்கின்றார்கள்.

இராணுவத் தளபதியாக இருந்த ஷவேந்திர சில்வா போன்றோர் விடயத்தில், அவர்களை மீறி இந்த ஜனாதிபதியாலும் அவரின் அரசினாலும் கூட நீதி கிட்டக்கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட மாட்டா அல்லது எடுக்கப்பட இயலாது என்ற சந்தேக நிலை கருதியே, இந்த ஜனாதிபதிக்கும் அவரின் அரசுக்கும் கீழ் உள்ள அமைச்சர்களாக இருந்து கொண்டே இலங்கை நீதிமன்றத்தின் படி ஏறி இருக்கிறார்கள் அவர்கள்.

அரசின் பிரதான பங்காளிகளுக்கு கூட நீதி கேட்டு தமது அரசிடம் பெற முடியாது என்ற சந்தேகத்தில் நீதிமன்றத்தின் வாசல் கதவை தட்ட வேண்டிய நிலை இருக்குமென்றால் –

யுத்தத்தின் இறுதி கட்டத்தில் மிக மோசமான யுத்த குற்றங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள், மனித மாண்புகளுக்கு மாறான கொடூரங்கள், வலிந்து காணாமல் ஆக்கப்படல் போன்ற குற்றங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு இந்த அரசுக் கட்டமைப்பிலிருந்து நீதி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது சுத்த முட்டாள் தனம் அல்லவா?

# புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டுக்கு டொலர்களை அனுப்பாமல் இருக்கின்றமைக்கான காரணம் என்ன?

## விளக்குகிறார் மனுஷ நாணயக்கார



கொவிட் காலத்தில் புலம்பெயர் தொழிலாளர்களை மனித வெடிகுண்டு என சித்தரித்து அவர்களை அரசியல்வாதிகள் புறக்கனித்ததாலே நாட்டுக்கு டொலர் அனுப்புவதை அவர்கள் நிறுத்திக்கொண்டார்கள்.

அதனாலே வெளிநாட்டு செலாவணி இல்லாமல்போனது. என்றாலும் தற்போது அந்த நிலைமையை மாற்றியமைத்து வருகின்றோம் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைப்பு மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ச்ர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டுக்கு வெளிநாட்டு செலாவணி அதிகம் கிடைக்கும் பிரதான வழியாக வெளிநாட்டு தொழில் வாய்ப்பு இருந்து வருகின்றது. அதனால் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் பல்வேறு சலுகைகளை வழங்கி வருகின்றது.

குறிப்பாக அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று அவர்கள் வீடு கட்டுவதற்கு சலுகை அடிப்படையிலான கடன் வசதிகளை செய்திருக்கின்றோம்.

வாகன அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். இவ்வாறு பல நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம்.

அத்துடன், அவர்கள் நாடு திரும்பும்போது விமான நிலையத்தில் டியுடிபிரி அடிப்படையில் சில சலுகைகளை வழங்குவதற்குத் திட்டமிட்டு அதற்காக திறைசேரிக்கு ஆலோசனை வழங்கி இருக்கின்றோம். என்றாலும் திறைசேரி அது தொடர்பில் இன்னும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

அரசாங்கத்தில் இருந்தாலும் சில விடயங்களை நாங்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டி இருக்கின்றது. இல்லாவிட்டால் நாங்கள் எதனையும் செய்யவில்லை என்றே தெரிவிப்பார்கள்.

மேலும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக வெளிநாட்டுத் தொழிலுக்கு செல்லும் வீதம் அதிகரித்துள்ளது.

வரலாற்றில் முதல் தடவையாக இந்த வருடம் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு தொழிலுக்கு செல்பவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்தைத் தாண்டி இருக்கின்றது. என்றாலும் அவர்கள் நாட்டுக்கு அனுப்பும் பணம் போதுமானதாக இல்லை. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் அனுப்பப்படும் டொலர்களின் தொகை அதிகரித்துள்ளது. அத்துடன், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் நாட்டுக்கு அதிக பணத்தை அனுப்பிக் கொண்டிருந்தார்கள். என்றாலும் கொவிட் காலத்தில் அவர்கள் நாடு திரும்பும்போது பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுத்தார்கள். அவர்களின் பிரச்சினைகள் கண்டுகொள்ளப்படவில்லை.

அவர்களை ஆரம்பத்தில் நாட்டின் வீரர்கள் எனத் தெரிவித்தவர்கள், கொவிட் காலத்தில் மனித வெடிகுண்டு எனத் தெரிவித்தார்கள். அரசியல்வாதிகளின் நடவடிக்கையால் அவர்கள் விரக்தியடைந்திருந்தனர். அதன் காரணமாகவே அவர்கள் அரச வங்கிகள் ஊடாக நாட்டுக்கு பணம் அனுப்புவதை நிறுத்திக் கொண்டார்கள்.

என்றாலும் தற்போது நாங்கள் அவர்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதால் அவர்களும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து முறையான நடவடிக்கையில் பணம் அனுப்புகின்றனர். அது பழைய நிலைமைக்கு இன்னும் திரும்பவில்லை. 2020 காலத்தில் அன்னிய செலாவணியாக வெளிநாட்டு தொழிலாளர்கள் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையை மீண்டும் பெற்றுக்கொள்வதே எமது இலக்காகும். – என்றார்.

# தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது நாட்டு மக்களின் நிலைப்பாடு அல்லவாம்!

## இப்படிக் கூறுகிறார் ரோஹித அபே குணவர்தன



நாட்டில் தற்போது தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது மக்களின் நிலைப்பாடு அல்ல. பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீள்வதே மக்களின் தேவையாக உள்ளதே தவிர, தேர்தல் அல்ல.

எவ்வாறிருப்பினும் எந்த சந்தர்ப்பத்திலும் எந்தவொரு தேர்தல் நடத்தப்பட்டாலும் அதனை எதிர்கொள்ள பொதுஜன பெரமுன தயாராக உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பொதுஜன பெரமுன எந்த சந்தர்ப்பத்திலும் தேர்தலுக்குத் தயாராகவே உள்ளது. தேர்தலைக் கண்டு அஞ்சுபவர்கள் நாம் அல்லர். வரலாற்றில் எந்தவொரு தேர்தலையும் காலம் தாழ்த்தாத ஒரேயொரு கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மாத்திரமேயாகும்.

'முன்னோக்கிச் செல்வோம்' என்ற தொனிப் பொருளின் கீழ் தேர்தலை எதிர்கொள்வதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். இவற்றை சகல கிராம உத்தியோகத்தர் மட்டத்திலும் நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளோம். ஆனால் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்திக் கொண்டிருக்கும் எந்தவொரு எதிர்க்கட்சியும் இன்னும் அதற்குத் தயாராகவில்லை.

எனவே தான் தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அவசியமற்றது என்றும், நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமாறும் கோருகின்றனர்.

அரசமைப்பின் படி செயற்பட வேண்டும் என்று கூறிக் கொண்டிருக்கும் எதிர்க்கட்சிகள், இன்று அதனை மீறி நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்லுமாறு வலியுறுத்துகின்றன. இதற்கான காரணம் என்ன என்பது எமக்குத் தெரியாது.

எவ்வாறிருப்பினும் மக்களிடம் சென்று தற்போது அவர்களுக்கு தேர்தல் வேண்டுமா என்பதைக் கேட்க வேண்டும். காரணம் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தேர்தல் செலவுகளையும் சுமப்பதற்கு மக்கள் விரும்பமாட்டார்கள். எனினும் அவற்றை மீறி தேர்தல் நடத்தப்படுமெனில் அதற்குத் நாம் தயாராகவே உள்ளோம். – என்றார்.

# 2023 ஆம் ஆண்டு தேர்தலில் ரணில் தமிழ்த் தரப்பு ஆதரவோடு ஜனாதிபதியாவதற்கான முன்னேற்பாடே பிரச்சினைக்கு தீர்வு!

## அதைத் தமிழ்த் தலைவர்கள் உணரவேண்டும் என்கிறார் குமார் குணரட்னம்

(இ.கலையமுதன்)

2023 ஆண்டு இறுதியில் ராஜபக்ஷ, சஜித் அணி, தமிழ் தரப்பு ஆதரவுடன் ஜனாதிபதி வேட்பாளராக வருவதற்கான முயற்சியில் ரணில் விக்கிரமசிங்க ஈடுபடுகிறார். அதற்கான முன்னேற்பாடே தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்க்கப்போவதாக அவர் கூறுகிறாரென தெரிவித்த முன்னிலை சோசலிசக் கட்சியின் பொதுச்செயலாளர் குமார் குணரட்னம் தமிழ்தரப்புகள் இதனை விளங்கி கொள்ளவேண்டும். – என்றார்.




யாழ் ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

2015 நல்லாட்சி என கூறிய காலத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகளை அவசரமாகத் தீர்ப்பது போன்ற தோற்றம் காட்டப்படுகின்றன. இந்த சந்தர்ப்பத்தை நாம் பாவிப்போமென தமிழ் தரப்புக்கள் நம்பகூடாது. போராட்டத்தை நம்பவேண்டும். ரணிலின் விளையாட்டுக்கு எடுபடக்கூடாது.

இனவாதத்துக்கு எதிரான தன்மையை காலி முகத்திடல் போராட்டத்தில் கண்டோம். ஆனால் தற்போது இன ஒற்றுமையைப் பிரிக்க முயற்சிக்கின்றனர். போராட்டத்துக்கு இடமளிக்கமாட்டேன் என ராஜபக்ஷவினருக்கு ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதியளித்துள்ளார். இராணுவம், பொலிஸ்,புலனாய்வுத்துறை என்பன போராட்டத்தை அடக்க முனைப்பு காட்டுகின்றன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தி போராட்டத்தை அடக்க முயல்கின்றனர். அது தொடர்பாக யாழ்ப்பாண மக்களுக்கு அனுபவம் உண்டு. சிங்கள மக்களுக்கு அது புதிதானதே.

போராட்ட சக்திகளை பிரிக்க பல்வேறுபட்ட முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. நடுத்தர வர்க்கத்தை இலக்கு வைத்து தனியார் பல்கலைக்கழகத்தை உருவாக்க முயற்சிக்கிறார். வரவு – செலவுத் திட்டம் மூலம் ஒரு லட்சம் வருமானம் பெறுபவரும் வரிசெலுத்தும் நிலை உள்ளது.

அரசமைப்பு மற்றும் நாடாளுமன்றம் மூலம் செய்யமுடியாததை போராட்டம் மூலம் செய்யமுடிந்தது.

அதிகநேர மின்வெட்டு, வரி அறவீடு போன்றவற்றால் 2023 ஆம் ஆண்டு போராட்டத்துக்கான வளர்ச்சியாக இருக்கும். நடுத்தர சாதாரண மக்கள் பொருளாதார நெருக்கடியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பொருளாதார நெருக்கடிக்கு எதிராக மாணவர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் கிளர்ந்தெழுவர்.

தேர்தலொன்று நடந்தால் அதனுடன் இணைந்ததாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு புதிய அரசமைப்பு கொண்டுவர வேண்டும். நாடாளுமன்ற முறைமை இருக்கட்டும். மக்கள் அதிகாரம் கொண்ட மக்கள் சபை உருவாக்கப்பட வேண்டும் .ஜூலை 9 போராட்டத்தில் இதனையே கண்டோம். பிரதேசவாரியாக இவை உருவாக்கப்பட வேண்டும். – என்றார்.




## பிரையன் தோமசிற்கு சாப்டர் அனுப்பினார் குறுஞ் செய்தி!

### வெளியானது அதிர்ச்சி தகவல்



வர்த்தகர் தினேஸ் சாப்டரின் கொலையாளி என கருதப்படும் நபர் கிரிக்கெட் வர்ணணையாளர் பிரையன் தோமசிற்கு சாப்டரின் கையடக்க தொலைபேசியிலிருந்து குறுஞ்செய்தி அனுப்பினார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

சாப்டரின் கையடக்க தொலைபேசியிலிருந்து பிரையன் தோமசின் கையடக்க தொலைபேசிக்கு அனுப்பப்பட்ட குறுஞ்செய்தி பொரளை கனத்த மயான பகுதியிலிருந்து சாப்டர் கொல்லப்பட்ட பின்னர் அனுப்பப்பட்டுள்ளது என்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது என சி.ஐ.டியினர் தெரிவித்துள்ளனர் என டெய்லி நியுஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சாப்டரை கொலை செய்தவர் இந்த குறுஞ்செய்தியை சாப்டரின் கையடக்க தொலைபேசியிலிருந்து பிரையன் தோமசிற்கு அனுப்பியுள்ளார் எனக் கருதப்படுவதாக சி.ஐ.டியினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை விசாரணைகளின் போது சம்பவம் நடந்த அன்று சாப்டரின் கார் நேரடியாக அவரின் வீட்டிலிருந்து கனத்த மயானத்துக்கு வந்தமை தெரியவந்துள்ளது.

இந்த கொலை தொடர்பில் பல ஆச்சரியமளிக்கும் விடயங்கள் வெளியாகியுள்ளன. விசாரணைகளை முன்னெடுத்துள்ளவர்கள் பல ஆச்சரியமளிக்கும் விடயங்களை வெளியிட்டுள்ளனர்.

எங்களிற்கு கிடைத்துள்ள பல தகவல்களை ஆராய்ந்து உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம் பல அதிர்ச்சி தகவல்கள் வெளியாகலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# 8 வயது மகன் நித்திரைக்கு செல்லாதமையால் பொலிஸுக்கு 119 இற்கு அழைப்பெடுத்த தாய்!

மூன்றாம் வகுப்பில் கல்வி பயிலும் சிறுவன் இரவு 7 மணிக்கு நித்திரைக்கு செல்லாத காரணத்தால் சிறுவனின் தாய் 119 பொலிஸ் அவசர பிரிவிற்கு முறைப்பாடு தெரிவித்த சம்பவம் ஒன்று தம்புள்ளையில் இடம் பெற்றுள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது –

தம்புள்ள பொலிஸாருக்கு இரவு நேரம் அவசர தொலைபேசி அழைப்பு ஒன்று கிடைத்துள்ளது. அதன்படி தமது பிள்ளை குழப்பம் செய்வதாகவும் குடும்ப அங்கத்தவர்களுக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து தம்புள்ள பொலிஸார் இருவர் குறிப்பிட்ட இடத்துக்கு மோட்டார் சைக்கிள் மூலம் சென்றுள்ளனர். சுமார் 15 கிலோ மீற்றர் தூரம் பயணித்து வீட்டைத் தேடிப்பிடித்துள்ளனர். வீடு மூடப்பட்டு அமைதியாகக் காணப்பட்டுள்ளது.

பொலிஸார் அவர்களை எழுப்பி, 119 தெலைபேசி இலக்கத்துக்கு கிடைத்த முறைப்பாட்டை விசாரிக்க வந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். அப்போது வீட்டு எஜமானி பின்வருமாறு கூறியுள்ளார்.

இப்போது காலம் கடந்து விட்டதே, நான் 7 மணிக்கு அல்லவா தொலைபேசி எடுத்தேன். தற்போது இரவு 9 மணி ஆகிவிட்டதே என்று கூறியுள்ளார். விடயம் புரியாத பொலிஸார் மேலதிக தகவல்களைக் கேட்டுள்ளனர்.

அதன் போதுதான் பின்வரும் விடயம் தெரிய வந்துள்ளது. இரவு 7 மணிக்கு முன்பே பிள்ளைகளுக்கு உணவளித்து நித்திரைக்கு அனுப்புவதாகவும் ஆனால் 3 ஆம் தரத்தில் கல்வி பயிலும் குறிப்பிட்ட ஒரு மகன் மட்டும் நித்திரை செய்யாது மற்றயவர்களுக்கு இடையூறு செய்வதாகவும், எனவே அவரைப் பயமுறுத்தி நித்திரை செய்ய வைக்கவே பொலிஸாருக்க தகவல் தெரிவித்தேன் எனவும் கூறியுள்ளார்.

இதனைக் கேட் பொலிஸார் கோபமேலீட்டால் இப்படியான சிறிய விடயங்களுக்கு எங்களை அழைக்கக் கூடாது என்றும், இதனால் அரசுக்கு செலவு ஏற்படுவதாகவும், அத்துடன் தமது கடமைகளை செய்வதில் தாமதம் ஏற்படுவதாகவும் தெரிவித்து கடும் எச்சரிக்கை செய்து, மீண்டும் பொலிஸ் நிலையம் திரும்பியுள்ளனர்.





கிளிநொச்சி மகாவித்தியாலயத்தின் 2016 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்கள் வித்தியாலயத்தின் விழுதுகள் 2016 அமைப்பின் ஏற்பாட்டில் கடந்த சனிக்கிழமை பூநகரி முக்கொம்பன் பிரதேசத்தில் நடைபெற்ற இலவச மருத்து முகாமில் 250 இற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

இவ் இலவச மருத்துவ முகாமிற்கான நிதி அனுசரணையினை எழுகை அமையம் ஊடாக **Help For Tamil People (HFTP)** யும் கண் ,பற்சிகிச்சைகளுக்கான அனுசரணையினை கல்வி வளர்ச்சி அறக்கட்டளை**(KEDT)** அமைப்பும் வழங்கியிருந்தது.

இதன் போது கண்கள் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக மூக்குகண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்திய அதிகாரி, பணியாளர்களுடன் யாழ் .போதனா வைத்தியசாலையின் வைத்தியர்களும் மருத்துவ குழாமினரும் வைத்திய சேவைகளில் ஈடுபட்டு சிரமமான போக்குவரத்து வசதியால் அல்லலுறும் முக்கொம்பன் வாழ் மக்களிற்கு பயனுடைய சேவையாற்றியிருந்தனர்.

# போலி கடவுச்சீட்டு தயாரித்து இலங்கை வரமுயன்ற இரு பெண்கள் சென்னை விமானநிலையத்தில் கைது!

போலியாக இந்திய கடவுச்சீட்டுகளை தயாரித்து அதன் மூலம் இலங்கைக்கு வர முயற்சித்த இரண்டு இலங்கைப் பெண்கள் சென்னை சர்வதேச விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போலிக் கடவுச் சீட்டுக்களில் சென்னை முகவரி குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இரண்டு பெண்களும் இலங்கை வருவதற்கு சுற்றுலா விசா பெற்றுள்ளனர் எனவும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த இரு பெண்களும் சில வருடங்களுக்கு முன்னர், இலங்கையிலிருந்து, சுற்றுலா விசாவில், சென்னைக்கு வந்து, இலங்கை திரும்பாமல், சென்னையில் தங்கியிருந்தனர் என விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





## FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# பொருளாதார, புவிசார் அரசியல் சவால்களுக்கு இந்தியாவின் ஜி – 20 தலைமைப் பதவியில் தீர்வு






பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் சவால்களுக்கு மத்தியில் ஜி – 20 தலைமைப் பதவியை இந்தியா ஏற்கும் போது, பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கம் பணவீக்கம், அதிக கடன், உணவுப் பாதுகாப்பு மற்றும் பருவநிலை மாற்ற பிரச்சினைகளை சமாளிக்க சாதகமான மாற்றத்தை கொண்டு வரும் என்று நம்புகிறது.

ஜி – 20 என்பது உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 85 சதவிகிதம், உலகளாவிய வர்த்தகத்தில் 75 சதவிகிதம் மற்றும் உலக மக்கள்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக்கான முதன்மை மன்றமாகும்.

டிசம்பர் 1 அன்று, பிரதமர் நரேந்திர மோடி, ஜி – 20 க்கான இந்தியாவின் நிகழ்ச்சி நிரல் அனைவரையும் உள்ளடக்கியதாகவும், லட்சிய நோக்குக் கொண்டதாவும், செயல் சார்ந்ததாகவும் இருக்கும் என்றார். பிரதமர் மோடி தனது வலைப்பதிவு இடுகையில், உலகளாவிய ஒற்றுமை உணர்வை ஊக்குவிக்க இந்தியா செயல்படும் என்றும், அதன் முன்னுரிமைகள் ஜி 20 கூட்டாளர்களுடன் கலந்தாலோசித்து மட்டுமல்ல, உலகளாவிய தெற்கு நாடுகளுடனும் வடிவமைக்கப்படும் என்றும் கூறினார்.

பருவநிலை மாற்றம், பயங்கரவாதம் மற்றும் தொற்று நோய்கள் போன்ற இன்றைய பெரும் சவால்களை ஒருவருக்கொருவர் சண்டையிடுவதன் மூலம் தீர்க்க முடியாது, ஆனால் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் தீர்க்க முடியும் என்று அவர் அடிக்கோடிட்டுக் காட்டினார். இந்தியாவின் ஜி 20 நிகழ்ச்சி நிரல் அனைவரையும் உள்ளடக்கியதாகவும், லட்சிய நோக்குக் கொண்டதாவும், செயல் சார்ந்ததாகவும், தீர்க்கமானதாகவும் இருக்கும் என்று அவர் எழுதினார்.

'ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம்' என்ற கருப்பொருளை மேற்கோள் காட்டிய்ச், பிரதமர் மோடி, இந்தியாவின் ஜி – 20 தலைமைத்துவம் இந்த உலகளாவிய ஒருமை உணர்வை ஊக்குவிக்கும் வகையில் செயல்படும் என்றார். இது வெறும் கோம் அல்ல. இது மனித சூழ்நிலைகளில் சமீபத்திய மாற்றங்களை கணக்கில் எடுத்துக்கொள்கிறது, நாங்கள் கூட்டாக மெச்சத் தவறிய விடயம் இது என்று அவர் கூறினார்.

தென் – தெற்கு ஆராய்ச்சி முன்முயற்சி (SSRI) என்ற சிந்தனைக் குழுவிற்கு எழுதும் பர்ஜானா ஷர்மின், இந்தியா தனது உலகளாவிய தொலைநோக்குப் பார்வையையும் பெரும் மூலோபாயத்தையும் செயல்படுத்துவதற்கான வாய்ப்பை இறுதியில் பெற்றதாகவும், இரண்டாவதாக, ஜி – 20 இல் இந்தியாவின் தலைமையின் மூலம் தெற்காசியப் பகுதி பலன்களைப் பெறப் போகிறது என்றும் குறிப்பிட்டார்.

அடுத்த உச்சிமாநாட்டிற்கு முன் தெற்காசியாவிற்கு இந்தியா நிறைய செய்ய முடியும். ஆனால் இந்தியாவின் முன் இருக்கும் மிகவும் சவாலான அம்சம் ஜி – 20 தளத்தைப் பயன்படுத்தி புவிசார் அரசியல் பாதுகாப்பு பிரச்சினைகளை தீர்ப்பதும் உறுப்பு நாடுகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைத்தலும் ஆகும். தொற்றுநோய்க்குப் பிந்தைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் இந்தியா தீர்க்கமான பங்கை வகிக்க முடியும். என்று புதுதில்லியின் தெற்காசியப் பல்கலைக் கழகத்தின் சமூக அறிவியல் பீடத்தின் சர்வதேச உறவுகள் துறையின் முனைவர் பரீட்சார்த்தியான பர்ஜானா ஷர்மின் கூறினார்.

பெரிய வல்லரசுகளின் இறையாண்மை அச்சுறுத்தல்கள் மற்றும் பொருளாதார விதிகளை அமைப்பதில் வளர்ந்த நாடுகளின் ஆதிக்கம் ஆகியவற்றால் உலக நிர்வாகம் மற்றும் ஒழுங்கில் சிறிய நாடுகள் எவ்வாறு நம்பிக்கை இழந்துள்ளன என்பதை ஷர்மின் சுட்டிக் காட்டினார்.

இந்த சிக்கல்கள் பூகோளத்தின் தெற்கில் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்துகின்றன. எனவே, பல உலகளாவிய தென் நாடுகளுக்கு இந்தியா ஒரு நம்பிக்கையாக உள்ளது, மேலும் இது குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளின் கருத்துக்களை உள்ளடக்கியது மற்றும் ஜி – 20 இல் நேரடி உறுப்பினர்களாக இல்லாத நாடுகளுக்கு வாய்ப்பை வழங்க வேண்டும்." – என்று அவள் மேலும் சொன்னார்.

(மூலம்:த எக்கனமிக் ரைம்ஸ்)

# இந்தியாவின் உலகளாவிய லட்சியங்களுக்கு வாய்ப்பாக வந்துள்ள ஜி 20 தலைமைப் பதவி






சமீபத்தில் ஜி 20 தலைமைப் பதவியை ஏற்ற இந்தியா, அதன் உலகளாவிய லட்சியங்களுக்கு ஒரு முக்கியமான ஆண்டு வரவிருக்கிறது.

உக்ரைனில் நடக்கும் போர் உள்ளிட்ட உலகளாவிய சவால்கள் மற்றும் தொற்றுநோய்க்குப் பின் ஏற்படும் தீவிர கவலைகள் ஆகியவை இந்தியாவின் தலைமைப் பதவியில் கவனம் செலுத்தும் அம்சங்களாகும்.

ஜி 20 போன்ற குழுக்களின் கூட்டு முயற்சி, உலக உலகின் கவலைகளை முன்வைப்பதில் வரலாற்று ரீதியாக ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது. அவை மற்ற பலதரப்பு மன்றங்களில் பெரும்பாலும் கேட்கப்படாமல் போய்விட்டன. இதன் மூலம் இந்தியா, அதன் அருகில் உள்ள பிராந்தியங்கள் மட்டுமின்றி, உலகளாவிய தெற்கில் உள்ளவர்களின் கவலைகளையும் நோக்கி உலகளாவிய நிகழ்ச்சி நிரலை வழிநடத்துவதைக் காண்கிறது.

இந்தியாவின் தலைமைப் பதவியின் கருப்பொருள் 'வசுதைவ குடும்பம்: ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம்' என்பது. இது உலகம் எதிர்கொள்ளும் உடனடி உலகளாவிய சவால்களுக்கு கூட்டாக பதிலளிக்கும் இந்தியாவின் குறிக்கோளை விளக்குகிறது.

இந்தியா, அதன் முடிவில், வார்த்தைகளை செயலாக மாற்றும் முயற்சியில் G20 உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் பல்வேறு பலதரப்பு குழுக்களில் தனது முயற்சியை ஒருமுகப்படுத்த முயன்று வருகிறது. உதாரணமாக, IBSA (இந்தியா – பிரேசில் – தென்னாப்பிரிக்கா) முத்தரப்பு சமீபத்தில் பொருளாதார ஒத்துழைப்பில் ஜி 20 இன் பங்கை மீண்டும் உறுதிப்படுத்த ஒப்புக்கொண்டமை மற்றும் நிலையான பேண்தகு வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதில் அதன் அவசியத்தை வலியுறுத்தியமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தென்னாப்பிரிக்கா மற்றும் பிரேசிலுடனான முத்தரப்புப் போட்டியில் இந்தியாவின் இருப்பு, வேகமாக வளர்ந்து வரும் சில வளரும் நாடுகளுக்கான வளர்ச்சி சார்ந்த கண்ணோட்டத்தை நோக்கி கூட்டாக வலியுறுத்துவதற்கும் வழிநடத்துவதற்கும் அரிய வாய்ப்பை வழங்குகிறது. அதுவும் 2023ல் இந்தியா, 2024 இல் பிரேசில், 2025 இல் தென்னாப்பிரிக்கா ஆகிய மூன்று நாடுகளும் அடுத்தடுத்து தலைபைப் பதவி வகிக்கும் அரிய வாய்ப்புடன்.

இரண்டாவதாக, உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு என்பது உலகளாவிய தெற்கை எதிர்கொள்ளும் ஒரு முக்கிய கவலையாக இருக்கலாம், மேலும் இது உக்ரைனின் நெருக்கடியால் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ எடுத்துக்காட்டுகிறது. இந்தியாவின் தலைமைப் பதவி, பிரதமர் மோடியால் வலியுறுத்தப்பட்டபடி, பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் தங்களைக் காணும் நாடுகளின் உலகளாவிய நலனைப் பாதுகாக்க முயல்கிறது. குறிப்பாக உலகளாவிய நிச்சய மற்ற காலத்தின் போது முக்கியமான உணவு மற்றும் எரிசக்தி விநியோகச் சங்கிலிகளைப் பாதுகாப்பதில் இந்தியாவின் ஜனாதிபதியின் போது ஒரு ஒருங்கிணைந்த முயற்சி நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோல், காலநிலை மாற்றத்தைத் தணிக்கும் அதன் கூட்டு முயற்சியை மற்ற உறுப்பு நாடுகளுக்கு வழங்க, 'குவாட்' இல் அதன் உறுப்பினரைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வது நல்லது.

(மூலம்:ஏ.என்.ஐ.)



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே...



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 217

புலம்பெயர் மக்களின் இளைய தலைமுறைகள் பெரும்பாலும் தாங்கள் வாழும் சூழல்களின் அழுத்தங்களால் தமிழ் மக்களது பிரச்சனைகளையும் அந்தக் கோணங்களில் இருந்தே பார்க்கிறார்கள். நாட்டின் அரசியல் கோஷங்களை முன்னெடுத்து பிரசாரமாகாமல், சம்பவங்களை அவற்றின் தன்மைகளிலே பிரதிபலித்து, பெருமளவில் எங்கே நீதி, தர்மங்கள் தவறுகின்றன என்றும் அவற்றுக்கு நியாயம் தேவை என்பதை வலியுறுத்த விழைகிறார்கள். அந்தப் பிரதிபலிப்புகளை கட்டுப்படுத்தவோ அல்லது அவற்றில் உட்புகுந்து அரசியல் நடப்புகளுக்கு முதன்மை கொடுக்க அழுத்தங்கள் தருவதையோ அவர்கள் விரும்புவதில்லை. அவை பிணக்குகளாக மாறினால், விரக்தியில் அவற்றைக் கைவிட்டு தங்கள் அழுவல்களைப் பார்ப்பது வழமையாகிறது.

புலம்பெயர் மக்களிலும் பல உட்பிரிவுகள். பொதுவாக 1956, 1977, 1983 பகுதிகளில் நாட்டைவிட்டு வெளியேறியவர்கள் பட்டங்கள், தகமைகள் பெற்றிருந்தமையால் தங்களது வாழ்க்கைகளை வெகு விரைவில் சீரமைக்க முடிந்தது. அதன் பின் அவர்களுக்கு முன் நின்றது தங்களது வாழ்க்கைகளின் வளங்களும் பிள்ளைகளின் படிப்பும் எதிர்கால வாழ்வும் தான்.

ஆயினும் நாட்டின் பிரச்சினைகளே அவர்களை அங்கிருந்து வெளியேற்றியமையால் அங்கு நடக்கும் அரசியலில் அவர்கள் அக்கறை காட்டினார்கள். தம்மால் முடிந்த உதவிகளை செய்தார்கள். வளர்ந்து வந்த அவர்களின் தலைமுறைகளோ பெற்றோரின் ஈடுபாட்டையும் ஆர்வத்தையும் பொறுத்து புலம்பெயர்களில் எடுக்கப்பட்ட போராட்டங்களில் பங்கு பற்றினார்கள். அவர்களின் பிற இனத்து நண்பர்கள் இவ்விடயங்களை பார்த்தம்சி போல "இந்த அரசியல் பிரச்சினைகளை விட்டு நீங்கள் வெளியேறத் தீர்மானித்த போது அங்கேயே அவற்றை விட்டு வந்திருக்க வேண்டும். இங்கு இந்த நாட்டில் அவை தேவையற்றவை" என பெற்றோரோடு வாதித்தார்கள்.

நாட்டின் ஒவ்வொரு நாளைய போராட்டமும் நாட்டிலிருந்த மக்களை பாதித்தமை போல் இவர்களைப் பாதிக்கவில்லை.

சந்திரிகாவின் சமாதான காலத்திலும் அதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை காலங்களிலும் இந்த பிரிவை சார்ந்த புலம்பெயர் மக்கள் நாட்டிற்கு வந்தார்கள். உறவுகளைப் பலப்படுத்தினார்கள். உதவிகள் தந்தார்கள். ஆனால் அவர்களின் பலர் தாங்களோ தங்களின் பிள்ளைகளோ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சில மாதங்கள் தன்னார்வ தொண்டுகள் செய்ய அனுமதித்தார்களே ஒழிய, யாரும் போராளி ஆகி சாவைத் தழுவவில்லை. மாவீரர் பட்டியலிலும் இடம் பெறவில்லை. நான் அறிந்த வரையில் போரின் கடைசி நாள்களிலும் முள்ளிவாய்க்காலிலும் தன்னார்வ பணிகளில் ஈடுபட்டிருந்த சிலரும் அவர்களை வெளியேற்ற அவர்களது நாடுகளின் வெளிவிவகார அமைச்சுகள் எடுத்த நடவடிக்கைகளும் இருக்கின்றன. அவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களே. புலம்பெயர் மக்களின் தொகையோடு பார்க்கும் போது விடுதலைப் போராட்டத்தில் அவர்களோடு மண்ணில் நின்றவர்கள் மிக சொற்பமே.

1990 களிலிருந்து பின் முள்ளிவாய்க்கால் அவலங்களால் விமான பயணங்களிலும், பின் படகுகளிலும் வந்து அகதிகளாக அந்தஸ்து பெற்றவர்கள், பெற முயற்சிகளில் இருப்பவர்கள் என்பது இன்னும் ஒரு சாரார்.

இவர்கள் தங்களது பாதிப்புகளின் வலிகளினால் நாட்டின் அரசியலில் அர்ப்பணிப்பும் உணர்வும் கூடியவர்களாக இருக்கிறார்கள். விடுதலைப் புலிகளின் புலம்பெயர் நடவடிக்கைகளில் தங்களை பெருமளவு இணைத்துக் கொண்டு செயல்படுபவர்கள். அவர்களது இளைய தலைமுறை கூட வாழும் சூழலினால் தாக்கங்களுக்கு ஆளாகி, பல வேலைகளில் குடும்ப ஆர்வங்களினாலும், நண்பரது வாழ்க்கையின் சந்தோங்களினாலும் இருதலைக் கொள்ளி எறும்பு தவிக்கின்ற மாதிரி தவிக்கின்றார்கள். இவர்கள் யாவருக்குமே தாங்கள் தஞ்சம் புகுந்த நாட்டில் எது விதத்திலேயே நிரந்தர வதிவிடம் பெற்று விட வேண்டும் என்ற தனியாக ஆவல் உண்டு. அதற்காக நாட்டில் பிரச்சினைகள் தொடர்ந்து கொண்டிருப்பது நல்லது என்ற அடிமனத்து உணர்வுகள், அத்தகையவற்றைச் சீண்டி வளர்க்க உதவிகள் தருவதும் உண்டு. தனி மனித ஆர்வங்களில் இவை தப்பில்லை. புலம்பெயரில் இருந்து நாட்டுக்கு செல்லும் செய்திகளே, அங்குள்ளவர் களைப் பெரும் தொகை செலவு செய்தும் வெளியேறி விட வேண்டும் என்ற ஆர்வத்தை தூண்டுகின்றன.




எனது அனுபவத்தில், நான் கணித்ததில், உதாரணமாக நானோ எனது குடும்பங்கள் கூட தனிநாடு கிடைத்தாலும் நாட்டுக்குத் திரும்பி வந்து வாழ்வோம் என எண்ணவில்லை. தனி நாடு கிடைத்தால் போவேன் என்று வீம்பு பிடிப்போர் உண்டு.

தங்களது திருவிழா நாள்களில் தாங்கள் சந்திக்கும் அடுத்த யூத இனத்தவரை குசலம் விசாரிக்கும் போது 'அடுத்த வருடம் இந்த விழாவில் இஸ்ரேலில் சந்திப்போம்' என்று கூறி விடைபெறுவார்களாம். அந்தச் சிறிய சிந்தனைகளும் அர்ப்பணிப்புகளும் சமுதாய நோக்குகளும் அவர்களுக்கு இஸ்ரேலை உருவாக்கத் துணை புரிந்தன.



தமிழ் மக்களை பொறுத்தவரையில் பிள்ளைகள் இனி திரும்ப வர மாட்டார்கள், பேரப்பிள்ளைகள் எப்படி விட்டு வருவது என்ற சாட்டுக்களிலேயே காலம் கழியும். நாடும் காடாகும். இலட்சியங்கள், சந்தர்ப்பவாதங்கள், சுயநலன்கள் என்ற அடுக்குகளின் போராட்டங்களிலேயே தமிழ் மக்களின் வாழ்வும் அரசியலும் சுழன்று கொண்டிருக்கின்றன. எவை எவ்விதங்களில் இயங்கினாலும், தமிழ் புலம் பெயர் சமூகம் ஒரு லட்சியத்தின் சிந்தனையில் ஒரு நோக்கில் இருக்கிறது. தாங்கள் நாட்டில் உள்ள மக்களுக்கு பலமாகவும் உதவிகள் தருபவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதில் அவர்களிடையே வேற்றுமைகள் இருப்பதில்லை. ஆகவே, தனி நாடு அவர்களுக்கும் திரும்பி வருவதற்கு தேவை என்றும், எனவே புலம்பெயர் மக்கள் அவர்களுக்காகவும் தங்களை மீட்டு விடுவார்கள் என்ற கற்பனவாதங்களில் மக்கள் ஆழ்ந்து விடாமல் இந்த யதார்த்தங்களிலும் உண்மை நிலைகளிலும் தங்கள் அரசியலை முன்னெடுக்க வேண்டும். புலம்பெயர் மக்களிடையே கூட குறிப்பிட்ட மாதிரி, இளைய தலைவர்கள் இடையே உள்ள தூரங்கள் நீண்டு கொண்டே போகின்றன.

### பேரிடரின் மீள்வு காலங்கள்

முள்ளிவாய்க்கால் போன்ற பேரிடர்களின் அகப்பட்ட மக்கள் கூட, அது போன்ற அவலங்களைச் சந்தித்த மக்களின் அனுபவங்களில், ஐந்து, ஆகக் கூடியது ஏழு வருடங்களுக்குள் குறிப்பிட்ட முன்னேற்றம் கண்டு, இழப்புக்களைத் தாங்கி, வாழ்வை பொறுப்பெடுத்துக் கொள்வார்கள் என்பதை மன,உளநல மருத்துவர்களும் ஆராய்வார்களும் கூறுகிறார்கள். அதற்கு அவர்களது வாழ்வை பொறுப்பெடுக்கும் அரசாங்கங்களும் அதற்காக மேற்கொள்ளப்படும் கட்டமைப்புகளும் முக்கியம். அவர்களது அரசாங்கம் பயுத்த வெற்றியைப் பொறுப்பெடுத்ததே அல்லாமல் அது பாதித்த மக்களை பொறுப்பேற்கவில்லை. போரின் போது இந்த மக்கள் நாட்டின் பிரஜைகள், அவர்களைப் பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து மீட்பதற்கே போரை நடத்துகிறோம் என பிரச்சாரம் செய்து, அதனை நடத்திய தன்மைகளில் அவர்கள் வேறு ஒரு பகுதிக்கு – அரசுக்கு எதிரானவர்களுக்கு – விசுவாசமாக இருந்தவர்கள் என வெற்றிக்கு பின்னான பேராண்மையின் திட்டங்களுக்கு ஏற்றவாறு அவர்களை நடத்தியது. இவற்றை அறிந்தும், புலம்பெயர் மக்கள் உதவி கரங்கள் நீட்டினாலும், இவற்றை வைத்து நடத்தப்பட்ட அரசியலால் இன்று 13 வருடங்கள் கடந்தும், இந்த மக்களின் வாழ்க்கை நிர்மூலமாகி, இழப்புக்களை தாங்கி வாழ்க்கையை பொறுப்பெடுக்கும் நிலைகளுக்கு வர முடியாதவர்களாக பரிதவிக்கிறார்கள். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை இன்றும் தேடி அலையும் உறவுகளும் நித்தம் நித்தம் அவர்கள் அடையும் மன அழுத்தங்களும் தேடலிலேயே உயிர்கள்






பிரிந்து விடுவதும் உதாரணமாக நிற்கின்றன. இந்த மக்கள் நம்பி இருந்த தலைவர்கள் அரசியல்வாதிகளின் தோள்களில் இருக்கும் இந்த சுமையை, மேலும் பழுவேறாமல் அவர்கள் இப்பொழுதாவது இதய சுத்தியுடன் தங்களது அரசியல்களின் ஆதாயங்களை பார்க்காது அணுகுதல் வேண்டும்.

அவற்றைத் தொடர்ந்து பார்ப்போம்.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# போதைப்பொருள்கள் கடத்தலில் இங்கு தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் வேலை

## பிடித்து படம் காட்டவேண்டாமென உமாச்சந்திர பிரகாஷ் காட்டம்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,டிச.20

பெருந்தொகையான போதைப்பொருள்கள் நாட்டுக்குள் கடத்தப்படும் போது அதனைப் பிடிப்பதை விட்டு விட்டு சிறியளவிலான போதைப்பொருட்களைப் பிடித்து படம் காட்டவேண்டாமென ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச்செயலாளர் உமாச்சந்திர பிரகாஷ் தெரிவித்தார்.

சமகாலநிலை தொடர்பாக யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

போதைப்பொருள் வர்த்தகத்தில் பெரும் புள்ளிகளும் பிரபலங்களும் ஈடுபடுகின்றனர். போதைப்பொருள் வியாபாரிகள் தொடர்பான விபரங்களும் பொலிஸாரிடம் இருக்கும்போது போதைப்பொருள் தொடர்பாக பாடசாலை செல்லும் மாணவர்களை இலக்கு வைத்து சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

வானத்தில் இருந்து விழும் ரொபி போல நினைத்து இந்த சோதனை நடவடிக்கையை செய்கிறார்களோ தெரியவில்லை. பாடசாலை மாணவர்களின் புத்தகப்பையை சோதிப்பது மாத்திரம் பொலிஸாரினதோ இராணுவத்தினரோ வேலை அல்ல என்பதை அவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

பெருந்தொகையான போதைப்பொருட்களை நாட்டுக் குள் கடல் வழியாகவோ ஆகாய வழியாகவோ வரும்போது அவற்றை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.




### 4 இலங்கைத் .......

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக ஹிமாலி சுபாஷினி டி சில்வா அருணதிலகவை நியமிப்பதற்கு உயர் பதவிகளுக்கான குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மேலும், ஜேர்மனுக்கான இலங்கைத் தூதுவராக லங்கா வருணி முத்துக்குமாரண, ஜோர்டான் இராச்சியத்திற்கான இலங்கைத் தூதுவராக ஜே.டி.எஸ். பிரியங்கிகா விஜேகுணசேகர மற்றும் தூதுவராக சஜீவ உமயங்க மெண்டிஸ் ஆகியோரை நியமிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### இன்று சஜித் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவரது எண்ணக்கருவில் உருவான பிரபஞ்சம் திட்டத்தின் ஊடாக மாணவர்களுடைய கல்வி செயல்பாடுகளுக்கு வலுவூட்டும் வகையில் இன்று காலை 9மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பஸ் பாடசாலை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

இவ்விழாவில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமாச்சந்திரா பிரகாஷ், கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் டாக்டர் விஜயராஜன் உள்ளடங்கலான கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொள்ள உள்ளனர்.

### வவுனியாவில் கன ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொட்டி வருகின்றது. மழை காரணமாக குளங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதுடன், தாழ் நிலப் பகுதிகளிலும் வெள்ள நீர் தேங்கியிருப்பதால் மக்களின் இயல்பு நிலை பாதிப்படைந்துள்ளது.

குறிப்பாக, வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆசிகுளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள மதுராநகர் கிராமத்தில் வெள்ள நீர் வீடுகளுக்குள் புகுந்ததால் ஐந்துக்கும் அதிகமான வீடுகள் பாதிப்படைந்துள்ளன. மேலும் பல வீடுகளுக்குள் வெள்ள நீர் உட் புகுந்துள்ளது. இதன் காரணமாக குறித்த வீடுகளில் வசித்து வரும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த மக்களின் நிலமை தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் கவனம் செலுத்தியுள்ளது.

### பொலிஸார் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் சமர்ப்பித்திருந்தார்.

அதன்படி, 8,312 ஆண் பொலிஸ் அதிகாரிகளும், 1,105 பெண் பொலிஸ் அதிகாரிகளும் அடுத்த தரப்பதவி நிலைக்கு பதவி உயர்வு பெற உள்ளனர்.

தற்போது பொலிஸ் கான்ஸ்டபிள்களாகவும், பொலிஸ் பரிசோதகர்களாகவும் பணியாற்றி வருபவர்களே இவ்வாறு பதவி உயர்த்தப்படவுள்ளனர்.

### ரூ.500 கோடி பெறுமதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீருடைத்துணிகள், 2023ஆம் ஆண்டில் இலங்கையின் 70 வீதச் சீருடைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எனத் தெரிவித்துள்ளது.

20 கொள்கலன்களில் 38,000 பெட்டிகளில் 30 லட்சம் மீற்றர் நிறைவுப் பொருள்களைக் கொண்ட முதல் தொகுதி சீனாவில் இருந்து இலங்கைக்கு வந்துள்ளது.

இலங்கைக்கான பள்ளி சீருடைப் பொருள்களுக்கான சீனாவின் முதலாவது தொகுதி உதவியில் பின்வருவன அடங்கும்:-

* மேற்சட்டை - வெள்ளைத் துணி - 23 லட்சத்து 74 ஆயிரத்து 427.5 மீற்றர்.
* கால்சட்டை - வெள்ளை துணி - 3 லட்சத்து 50 ஆயிரத்துவ்31.5 மீற்றர்.
* கால்சட்டை - நீலத் துணி - ஒரு லட்சத்து 50 ஆயிரத்துவ்31.5 மீற்றர்.
* ரோப் ஆரஞ்சு துணி - ஒரு லட்சத்து 38 ஆயிரத்து 134 மீற்றர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622
kalaikkathiradvt@ gmail.com






# காணாமல் ஆக்கப்பட்டோரின் அலுவலக விசாரணைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து உறவுகள் முல்லைத்தீவில் போராட்டம்!



முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் போனோருக்கான அலுவலகத்தால் (ஓ.ம்.பி) நேற்று (திங்கட்கிழமை) மேற்கொள்ளப்பட இருந்த பதிவு விசாரணை நடவடிக்கைகளுக்கு முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) காணாமல் போனோருக்கான அலுவலகத்தால் விசாரணை நடவடிக்கை இடம்பெறுவதற்காக காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் ஆணையாளர்கள் மூன்று பேர் மற்றும் அதன் அலுவலக உத்தியோகத்தர்கள் வருகை தந்து பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் மாவட்ட செயலகம் முன்பாக ஒன்றுகூடிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் விசாரணை நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓ.ம்.பி. அலுவலகம் ஒரு கண்துடைப்பு நாடகம், எங்களை ஏமாற்ற இவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள வேண்டாம், இழப்பீடோ நட்ட ஈடோ எமக்கு வேண்டாம், முறையான நீதி விசாரணையே வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களோடு போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகை தந்து கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்த ஓ.எம்.பி. அலுவலக ஆணையாளர்கள் பதிவு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யவேண்டும். அதன் பின்னர் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும் ஆகவே இன்றைய (நேற்றைய) பதிவு நடவடிக்கையில் கலந்துகொண்டு உங்கள் விவரங்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுகொண்டனர்.



இதற்கு எதிர்ப்பு வெளியிட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், எத்தனை தடவை பதிவுகளை – விசாரணைகளை – எத்தனை ஆணைக்குழுக்களிடம் முன்வைத்துள்ளோம். எல்லாமே ஏமாற்று வேலை. ஆகவே, இவ்வாறு பதிவு நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள வேண்டாம் என கேட்டுகொண்டனர். அதன் பின்னர் தாம் பதிவு நடவடிக்கை விசாரணை என்பனவற்றை நிறுத்துவதாக தெரிவித்த ஓ.எம்.பி. அலுவலக ஊழியர்கள் மீண்டும் மாவட்ட செயலகத்துக்குள் சென்றனர்.



முல்லைத்தீவு மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் காணாமல் போனோர் அலுவலகத்தால் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனக் கடந்த வாரம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பலருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு உள்ளிட்ட ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த 244 பேருக்கே இவ்வாறு விசாரணைக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்று (திங்கட்கிழமை) கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 29 பேருக்கும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 16 பேருக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 37 பேருக்கும், துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 32 பேருக்கும், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 08 பேருக்குமாக 122 பேருக்கும் –

இன்று (செவ்வாய்க்கிழமை) கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 10 பேருக்கும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 28 பேருக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 39 பேருக்கும், துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 32 பேருக்கும், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 13 பேருக்குமாக 122 பேருக்குமாக மொத்தமாக 244 பேருக்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில் பலர் விசாரணைக்கு சமுகம் தரவில்லை இவ்வாறு அறிவித்தலின் படி நேற்று விசாரணைக்காக வருகைதந்தவர்கள் கூட போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களோடு இணைந்து எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை 20 இற்கும் மேற்பட்ட புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களைப் படம் எடுத்தும் கண்காணிப்பில் ஈடுபட்டும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தனர்.

# நிதிக் கட்டுப்பாடுகளில் ஜனவரி முதல் தளர்வு!

## பிரதமர் தினேஷ் தெரிவிப்பு



மக்கள் நலன் கருதி எதிர்வரும் மாதங்களில் சமூக பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்கும். அதற்கமைய நிதி தொடர்பான கட்டுப்பாடுகளில் ஜனவரி முதல் தளர்வுகள் ஏற்படும் என நம்புவதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

தெஹிவளை – கல்கிஸை மாநகர சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

எத்தனை சிரமங்கள் இருந்தாலும் சமூக பாதுகாப்புடன் தொடர்புடைய வசதிகளைக் குறைக்காமல் பராமரிப்பதற்கு வரவு – செலவு திட்டத்தில் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. கடந்த காலங்களில் பொதுவான அம்சமாகக் காணப்பட்டது வருமானம் ஈட்டும் வழிமுறைகள் குறைவடைந்தமையாகும்.

தொழில்கள் இழக்கப்பட்டமை, முதலீட்டுக்காக திட்டமிடப்பட்டிருந்தவற்றை செயற்படுத்த இயலாமை , அதில் ஆர்வமின்மை , கட்டுமானத்துறையின் வளர்ச்சியில் ஏற்பட்ட பாதிப்புக்கள் என்பன இதில் தாக்கம் செலுத்தின.

கடந்த சில மாதங்களில் நாம் எதிர்கொண்ட நிதி மற்றும் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக , உள்ளூராட்சி மன்றங்கள் மாத்திரமின்றி , முழு நாட்டையும் பொதுவான முடிவிற்கு மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானம் எடுத்தது.

அதற்கமை நிதி முதலீடுகள் கடுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதனால் நிறுவனங்கள் வருமானம் பெறும் வழிகள் வீழ்ச்சியடைந்தன. இவை அரசாங்கத்துக்கு உரித்தான திணைக்களங்கள் , கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிலும் தாக்கம் செலுத்தின.

ஜனவரி மாதத்திலிருந்து இந்த நிலைமையை ஓரளவுக்கு தளர்த்த அரசாங்கம் எதிர்பார்க்கிறது. ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் இது தொடர்பில் ஏற்கனவே பல தீர்மானங்களை எடுத்துள்ளது. உள்ளூராட்சி நிறுவனங்களும் தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உள்ள தடைகளை நீக்க முடியும் எனப் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

# திருட்டுகளில் ஈடுபட்ட இருவர் கைது!

வெலிவேரிய மற்றும் களனி பிரதேசங்களில் வீடுகளை உடைத்தல் மற்றும் சொத்துகளைத் திருடுதல் போன்ற பல வழக்குகளில் தேடப்பட்டுவந்த இரு சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். மேல்மாகாண வடக்கு குற்றப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் பேலியகொடை, நவலோக சுற்றுவட்டத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் தம்புள்ளை மற்றும் கொழும்பு 14 பிரதேசங்களை சேர்ந்தவர்கள். திருடப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டி, கம்ப்யூட்டர், கையடக்கத் தொலைபேசி, புல்வெட்டும் இயந்திரம் உள்ளிட்ட பலவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# நாட்டைகூறுபோடும் மறைமுக நிகழ்ச்சிகளில் அரசு ஈடுபாடு!

## திஸ்ஸ விதாரண சாடல்

அரசாங்கம் நாட்டை கூறுபோட நினைக்கிறது. இதற்கான ஒரு திட்டமாக சர்வகட்சி கூட்டத்தை கூட்டியுள்ளது. அது மட்டுமன்றி, இலாபம் தரும் நிறுவனங்களை மூடி வெளிநாடுகளுக்கு விற்பதற்கான மறைமுக நிகழ்ச்சி நிரலை மேற்கொண்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினரும் லங்கா சமசமாஜ கட்சியின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இதனை அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

ஜனாதிபதி சர்வகட்சி மாநாட்டை கூட்டியபோதும் தீர்க்கமான முடிவுகள் எவையுமின்றித் தான் கூட்டத்தை நடத்தி முடித்திருக்கிறார். இதுவும் ஒரு மறைமுக நிகழ்ச்சி நிரலாகியுள்ளது.

சர்வகட்சி கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துகொண்டிருந்தது. அவர்கள் சமஷ்டி கோரிக்கை உள்ளிட்ட பலவிடயங்களை முன்வைத்திருந்தார்கள்.

சமஷ்டி என்கையில், தென்னிலங்கை சிங்கள இனவாதிகள் நாட்டை பிரிக்கப் போகிறார்கள் என்று இனவாதத்தை கக்கி வருகிறார்கள். இன்று நேற்றல்ல இது காலாகாலமாகவே இடம்பெற்று வருகிறது. அதனால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும்.

இலாபம் தருகின்ற ஸ்ரீ லங்கா ரெலிகொம், இலங்கை மின்சார சபை முதலான நிறுவனங்களை தனியாருக்கும் வெளிநாட்டுக்கும் விற்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. இதில் என்.எம்.பெரேரா பொருளாதாரத்தை உயர்த்த பல வேலைத் திட்டங்களை மேற்கொண்டார்.

ஆனால், தற்போது எவையுமே இல்லை.



இதனால் இளைஞர், யுவதிகள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர்.

என்சிசி – சோபா ஒப்பந்தத்தை நிறைவேற்ற இரகசியமாக வேலைகள் இடம்பெற்று வருகின்றன. அவ்வாறான நிலை ஏற்படுமானால், அமெரிக்க இராணுவம் வந்து, நிலைமை இன்னும் மோசமாகும். அதன் பின்னர் அவர்களுக்கு எதிராக எதுவும் செய்ய முடியாது.

தோட்டத் தொழிலாளர்களை உரிமையாளர்களாக மாற்றி, குறிப்பிட்ட நிலங்களை அவர்களுக்கு வழங்கினால், அவர்கள் முழுமூச்சாகப் பாடுபடுவதன் மூலம் டொலர்களை பெறலாம். அத்துடன் தேயிலை, இறப்பர் மூலமும் பெருமளவு டொலர்களைப் பெற முடியும்.

செவிடன் காதில் ஊதிய சங்கு போல அரசாங்கம் இருக்கிறது. கடந்த அரசாங்கம் பல பொருள்களின் இறக்குமதியைத் தடை செய்தது. ஆனால், இந்த அரசோ தடையை தளர்த்தி டொலரை இல்லாமல் செய்துள்ளது. இந்நிலையை மாற்ற வேண்டும்.

லங்கா சமசமாஜக் கட்சி யாழ்ப்பாணத்தில் சாவி சின்னத்தில் எதிர்வரும் காலத்தில் போட்டியிடவுள்ளது. எனவே, இன, மத பேதமில்லாமல் அனைவரும் எம்மோடு சேர வேண்டும். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.12.2022இல் வெளியிடப்பெற்றது.